நீதித்துறை நடுவர் எண் 3 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

<u>சி.சி.56/2018</u>

2018ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 25ம் நாள் வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 1வது நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு. ஆனந்தன் உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமணம் செய்து வைக்கப்படுகிறது.

பெயர்: பெரியகண்ணு வயது: 60

த/பெ.(அ)க.பெ: ராஜி தொழில்: கூலி

ஊர் : வேட்டப்பட்டு சமயம்: இந்து

வட்டம் : திருப்பத்தூர் சாதி:

மாவட்டம் : வேலூர்

<u>முதல் விசாரணை:-</u>

நான் வேட்டப்பட்டு கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் இருவரும் மூத்தார் மகன்கள். சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு ஒருநாள் மாலை 4 மணிக்கு மேலாக எதிரிகள் இருவரும் கிணறு பம்பு செட்டின் பீஸ் கேரியரை பிடிங்கி சென்று விட்டனர். அதை வாங்கி தரும்படி ஊர்கவுண்டரிடம் தகவல் சொன்னேன். அவரும் எதிரிகளிடம் பேசியுள்ளதாக அவர்கள் பீஸ் கேரியரை மாட்டி விடுவார்கள் என சொன்னார். அதற்கு பிறகும் பீஸ் கேரியரை பொருத்ததால் எதிரிகளிடம் கேட்ட போது எனக்கு கிணற்றில் பாத்தியமில்லை என்றும், அவர்களுக்கு தான் பாத்தியம் என்றும், தகராறு செய்தார்கள். நான் எனக்கு ஒருநாள், உங்களுக்கு ஒருநாள் என இன்று என்னுடைய பாத்தியம் தான் என்று சொன்னேன். அப்போது எதிரிகள் இருவரும் என்னை நூக்கி தள்ளி விட்டார்கள். என்னை அடித்ததில் வலது இடுப்பு பகுதியில் அடிப்பட்டு விட்டது. தற்போது கோல் ஊன்றி தான் நடக்கிறேன். சண்டை நடந்த போது கோவிந்தராஜ் என்பவர் அங்கே வந்து தடுத்தார். கீழே விழுந்திருந்த என்னை தூக்கி அமரவைத்தார். சம்பவத்தின் போது எனது முதலாளி ராஜியும் அங்கு தான் இருந்தார். காயமடைந்த என்னை சிகிச்சைக்காக அரசு மருத்துவமனைக்கு எடுத்து வந்தார்கள். மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது போலீஸார் விசாரித்தனர். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கைரேகை நான் வைத்தது தான். அந்த புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ 1 ஆகும். இது சம்மந்தமாக போலீஸார் என்னை விசாரித்தனர்.

எ.த.கு.வி:-

எனது கணவருடன் பிறந்த சகோதரர் மாரி என்பவர் மட்டும் தான் என்றால் சரிதான். பம்பு செட்டு கிணற்றிற்கும், எனது வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் ஒரு கொல்லி உள்ளது. கிணற்றிற்கும், மாரியின் வீட்டிற்கும் அதே தூரம் தான் இருக்கும். சம்பவத்தன்று மூத்தார் மாரி வீட்டிற்கு தான் தண்ணீர் முறை என்றால் இல்லை

எனக்கு தான் முறை. தண்ணீர் முறை எந்த நேரத்தில் இருந்து எந்த நேரன் வரை என்றல் தண்ணீர் முறை பொதுவாக ஒரு பகல் ஒரு இரவு எடுத்துக் கொள்வோம். பீஸ் கேரியரை எனது முத்தார் எடுத்து சென்றார் சுமார் 10 மணிக்கு எடுத்து சென்றார். பீஸ் கேரியரை எடுத்துச் சென்றதற்காக புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. ஊர் கவுண்டரிடம் தான் தெரிவித்தேன். ஊர் கவுண்டரிடம் எப்போது தெரிவித்தேன் என்றால் சுமார் 12 மணிக்கு மேல் தெரிவித்தேன் அவரது பெயர் பெருமாள் ஆகும். பெருமாள் அவர்களிடம் சொல்லும் போது உடன் யாருமில்லை என்றால் சரிதான். எதிரிகள் எனது வீட்டின் அருகே வரும் போது என்ன நேரம் இருக்கும் என்றால் மாலை 4.00 மணிக்கு மேல் இருக்கும். என்னை யார் அடித்தார் என்றால் ராமசாமி தான் அடித்தார். என்னை மருத்துவமனையில் சேர்த்தது மகளா மருமகளா என்றால் மருமகள். நடுமகன் சாம்ராஜ் இருந்தார். எனது மருமகள் காரில் என்னை அழைத்து சென்று மருத்துவமனையில் சேர்த்தார். காவல் நிலையத்தில் புகார் யார் கொடுத்தார்கள் என்றால் எனது மருமகள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். அ.த.சா.ஆ 1 புகாரில் உள்ள விவரங்கள் எனது மருமகள் சொல்லி எழுதினார்கள். என்னிடம் கைநாட்டு மட்டும் வாங்கினார்கள். நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும், எனது முத்தாரின் மீதுள்ள விரோததத்தால் பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. புகாரில் சொல்லியுள்ள சம்பவமும் நடக்கவில்லை என்றும், நானே தவறி விழுந்ததை கொண்டு இவ்வாறு புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

ம.வி:- இல்லை.

நீதித்துறை நடுவர் எண் 3 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

<u>சி.சி.56/2018</u>

2018ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 25ம் நாள் வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 2வது நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு. ஆனந்தன் உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமணம் செய்து வைக்கப்படுகிறது.

பெயர்: ராஜி வயது: 70

த/பெ.(அ)க.பெ: அபபா கவுண்டர் தொழில்: விவசாயம்

ஊர் : வேட்டப்பட்டு சமயம்: இந்து

வட்டம் : திருப்பத்தூர் சாதி:

மாவட்டம் : வேலூர்

<u>முதல் விசாரணை:-</u>

நான் வேட்டப்பட்டு கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 எனது மனைவி. ஆஜர் எதிரிகள் இருவரும் எனது அண்ணன் மகன்கள். கடந்த வருடம் 11 வது மாதம் ஒருநாள் கிணற்று பீஸ்' கேரியரை எனது அண்ணன் பிடிங்கி சென்று முன்று நாட்கள் ஆகிவிட்டதால அது சம்மந்தமாக நான் நிலத்தில் இருந்த போது எதிரிகள் மற்றும் எனது மருமகள் இருந்த போது வாய்தகராறு ஏற்பட்டது. அப்போது கோவிந்தராஜ் என்பவர் தகராறு வேண்டாம்என்று தடுத்து வீட்டிற்கு அனுப்பி வைத்தார். அப்போது மாலை சுமார் 6.00 மணியளவில் எனது வீட்டின் அருகே இருந்த போது எதிரிகள் இருவரும் ஓடி வந்து எனது மனைவியை பெரியகண்ணுவை அடித்துவிட்டனர். அதனால் அ.சா.1க்கு இடுப்பு உடைந்து விட்டது. எனது மனைவிக்கு காயம் அடைந்திருந்ததால் சிகிச்சைக்காக அரசு மருத்துவமனைக்கு எடுத்து வந்தோம். இது சம்மந்தமாக போலீஸார் என்னை விசாரித்தனர்.

எ.த.கு.வி:-

பம்பு செட்டு பிரச்சனை எனக்கும், எனது அண்ணனுக்கும் எவ்வளவு காலமாக உள்ளது என்றால் சுமார் 3 வருடங்களாக பிரச்சனை உள்ளது. எனது அண்ணன் பீஸ் கேரியரை எடுத்துச்சென்றதை பார்த்தேனா என்றால் நான் பார்த்தேன். எப்போது எடுத்துசசென்றார் என்றால் காலை ஒரு 8 மணிக்கு எடுத்துச்சென்றார். பீஸ் கேரியர் எடுத்து சென்றது சம்மந்தமாக புகார் அளித்தேனா என்றால் இல்லை. பீஸ் கேரியர் என்றைய தேதியிலிருந்து முனறு நாட்கள் என்று தெரியாது. பீஸ் கேரியர் எடுத்துச்சென்றது சம்மந்தமாக யாரிடம் எதுவும் சொல்லவில்லை. சண்டை நடந்த போது நான் நிலத்தில் இருந்ததால் நேரடையாக தெரியாது என்றால் இல்லை நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். சண்டை நடந்த போது எதிரிகளுடன் வேறு யார் இருந்தனர் என்றால் யாருமில்லை. சண்டை நடந்த போது யார் இருந்தது என்றால் என்னுடன் எனது பெரிய மருமகள், மகன் சாம்ராஜ், எனது மனைவி

உடன் இருந்தனர். போலீஸார் காவல் நிலையத்தில் எத்தனை மணிக்கு விசாரித்தனர் என்றால் போலீஸார் என்னை விசாரிக்கவில்லை. எனது அண்ணனுக்கும், எனக்கும், பம்பு செட்டு பிரச்சனைக்காக எனது மனைவி தவறி விழுந்த காயத்தை வைத்து எதிரிகள் மீது பொய்யான புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது அண்ணன் தான் பீஸ் கேரியர் பிடிங்கி சென்றார் என்றும், எனது அண்ணனை பழி வாங்க வேண்டும் என்பதற்காக அவரது மகன்கள் மீது புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல அடிப்பட்டது உண்மை தான்.

ம.வி:- இல்லை.

நீதித்துறை நடுவர் எண் 3 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

சி.சி.56/2018

2018ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 25ம் நாள் வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 3வது நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு. ஆனந்தன் உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர்: | கோவிந்தராஜ் | வயது: 45 |
| த/பெ.(அ)க.பெ: | மணி | தொழில்: விவசாயம் |
| ஊர் | : நாயுடுவட்டம் | சமயம்: இந்து |
| வட்டம் | : திருப்பத்தூர் | சாதி: |
| மாவட்டம் | : வேலூர் | |

முதல் விசாரணை:-

நான் நாயுடுவட்டத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1, 2 ஐ தெரியும். அவர்கள் பக்கத்து ஊர்காரர்கள். ஆஜர் எதிரிகளை தெரியும். வழக்கு சமபவத்தை நான் பார்க்கவில்லை. என்ன நடந்தது என எனக்கு தெரியாது. சுமார் 1 வருடத்திற்கு முன்னர் ஒருநாள் எதிரிகளுக்கும், அ.சா.2க்கும் நிலம சம்மந்தமாக தகராறு முன்தினம் நடந்ததாக காவல் நிலையம் வருமாறு மறுநாள் மதியம் 2.00 மணியளவில் என்னை அழைத்தார். அவருக்கு துணையாக நானும் சென்றேன். வழக்கு விவரங்கள் தெரியாது. போலீஸார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பு சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் அனுமதி கோரி வழங்கியதன் அடிப்படையில் அ.த.கு.வி)

கடந்த 12.11.2017 அன்று மாலை சுமார் 6.00 மணியளவில் அ.சா.2 ராஜியின் வீட்டின் அருகே எதிரிகள் தகராறு செய்து சத்தம் கேட்டு அங்கு சென்றேன் என்றால் இல்லை. அப்போது எதிரிகள் அ.சா.1ஐயும், அங்கிருந்த சாம்ராஜ் என்பவரையும் அடித்தார்கள் என்றும், மேற்படி சண்டையை நான் விலக்கி விடடேன் என்றால் இல்லை. மறுநாள் தகராறு செய்த தகவல் அ.சா.2 சொல்லி தான் தெரியும். போலீஸ் விசாரணையில் மேற்சொன்னவாறு சொல்லிவிட்டு தற்போது உண்மை சங்கதிகளை மறைத்து பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

எ.த.கு.வி:- இல்லை.